கல்குடா கல்வி வலய வளநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (இ/த) – 2018 ஆனி

தரம்: 12 (2019)	தவணை: 03	உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் I&II	நேரம்: 3மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

பகுதி I

1. விளைச்சலின் தரத்தில் காலநிலைக் காரணிகளால் ஏற்படும் பாதிப்பு பின்வருவனவற்றுள் எது?
   1. வாழை, காய்கறிகளில் திரட்சி ஏற்படல்
   2. அன்னாசிக்காம்பு வெடித்தல்
   3. கீரை வகைகளில் மஞ்சள் நிறம் உருவாதல்
   4. காய்கள் சதைப்பற்றாதல்
   5. உருளைக்கிழங்கில் பச்சை நிறம் உருவாதல்.

2. தேயிலை பயிர்ச்செய்கைக்கு மிகப் பொருத்தமான மண்வகை எது ?
   1. செம்மஞ்சள் பொற்சொலிக் மண்
   2. செங்கபில இலட்டோசொலிக் மண்
   3. செங்கபில மண்
   4. அலுவியல் மண்
   5. இருவாட்டி மண்

3. மண்ணின் அடர்த்தி தொர்பான சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளது.

   A. மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகம் எனில் மண் இறுக்கமடைந்துள்ளது
   B. மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகமெனில் மண் நீர் கொள்ளளவு உயர்வு
   C. குறித்த ஒரு இடத்தில் மண்ணின் தோற்ற அடர்த்தி மாறாது. எனினும் உண்மை அடர்த்தி மாறும்
   D. வெவ்வேறு பிரதேசங்களில் மண்ணின் உண்மை அடர்த்தி வேறுபடும். எனினும் அதன் வீச்சு 2.3 – 2.8 ற்குள் அமையும்.

   இவற்றுள் சரியானது

   1. A, B, C 2. A, B 3. A, C 4. A, D 5. A, B, C, D

4. மண் களித்துணிக்கைகள் பற்றிய கூற்றுக்களுள் தவறானது எது ?
   1. நீரை அகத்துறிஞ்சும் ஆற்றலும், நீரைத் தேக்கும் ஆற்றலும் உயர்வாகும்
   2. கற்றயன் பரிமாற்றக்கொள்ளளவு குறைவானது
   3. மண்ணுடன் சேரும் நச்சு அயன்களை உறிஞ்சும்
   4. மண்ணின் கனிப்பொருட் கூறாகும்
   5. இரசாயண இயல்புகள் மீது செல்வாக்குச் செலுத்தும்

5. சங்கிலி நில அளவையின் போது பார்வை மூலை மட்டம் பயன்படுத்தப்படுவது?
   1. அடிக்கோடு இடுவதற்கு
   2. திசையை அறிவதற்கு
   3. குத்தளவை பெறுவதற்கு
   4. பொருளுக்கு இடைப்பட்ட தூரத்தை அளப்பதற்கு
   5. அளவீட்டு நிலையங்களை குறிப்பதற்கு

www.kedu.lk

6. நிலஅளவையில் கிடைத்தூரத்தை அளப்பதற்கு மிகவும் செம்மையான முறை
   1. சங்கிலி அளவை முறை
   2. கவட்டளவீட்டு முறை
   3. அளவு நாடா முறை
   4. அளக்கும் சில்லு முறை
   5. இலத்திரனியல் முறை

7. சங்கிலி அளவை முறை தொடர்பான கூற்றுக்கள் வருமாறு.
   A - அடிக்கோட்டை அடையாளமிடல்.
   B - நிலத்தின் மீது அளவீட்டு நிலையங்களை அடையாளமிடல்.
   C - குத்தளவுகளை அடையாளமிடுதல்.
   D - எல்லைக் கோடுகளை அடையாளமிடல்.
   E - குத்தளவுகளில் இருந்து அடிக்கோடு வரையான தூரங்களை அளத்தல்.

   காணி ஒன்றின் பரப்பளவை துணிய மேற்கொள்ளும் செயற்பாட்டு ஒழுங்கு
   1) A, B, C, D, E
   2) D, A, B, C, E
   3) D, B, A, C, E
   4) D, B, C, A, E
   5) A, B, D, C, E

8. தன்னியக்க மட்டமானி பற்றிய கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.
   A: தன்னியக்க மட்டமானி மூலம் உயரத்தை அளவீடு செய்யமுடியாது.
   B: தன்னியக்க மட்டமானி மூலம் கோணத்தை அளவிடலாம்.
   C: தன்னியக்க மட்டமானி மூலம் தூரத்தை அளவீடு செய்ய முடியும்.
   மேற்கூறிய கூற்றுக்களில் சரியானது/ சரியானவை
   (1)A மட்டும் (2) B மட்டும் (3) A, B மட்டும் (4) B, C மட்டும் (5) A, B, C ஆகியன.

9. பீடக்குறி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A. கடல் மட்டத்திலுள்ள நிலைபேறான புள்ளி பீடக் குறி எனப்படும்
   B. யாதேனும் நியமமான மட்டத்திலிருந்து ஏற்றம் அறியப்பட்ட புள்ளி பீடக் குறி.
   C. நில அளவை அளத்தற் கருமங்கள் பீடக்குறியில் இருந்து தொடங்கப்படும்.
   D. நில அளவையில் ஒவ்வொரு புள்ளியின் ஏற்றமும் பீடக்குறி சார்பாக கணிக்கப்படும்
   தரப்பட்ட கூற்றுக்களில் மிகச் சரியானது/ சரியானவை
   1) Aமட்டும் 2) B மட்டும் 3) A, B மட்டும் 4) B, C மட்டும் 5) B, C, D மட்டும்

10. உயர்வான இடத்தில் அமைந்துள்ள தற்காலிகமான நீர்த்தாங்கு படுக்கை எது ?
   1. கட்டுண்ட நீர்த்தாங்கு படுக்கை
   2. ஆட்டீசிய நீர்த்தாங்கு படுக்கை
   3. குறை கட்டுண்ட நீர்த்தாங்கு படுக்கை
   4. பேர்ச் நீர்த்தாங்கு படுக்கை
   5. ஆட்டீசிய அல்லாத நீர்த்தாங்கு படுக்கை

11. நீரின் தரத்தை அளவிடுவதில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக காரணி அல்லாதது?
   1. நீரின் நிறம்
   2. கலங்கல் தன்மை
   3. நீரில் கரைந்த நிலையிலுள்ள ஒட்சிசன்
   4. நீரிலுள்ள மொத்த திண்மங்களின் அளவு
   5. நீர் வெப்பநிலை

12. நீரிற்கு படிகாரம் சேர்ப்பதனால்
   1) தொங்கல் நிலையிலுள்ள பதார்த்தத்தை அடையச் செய்யலாம்
   2) நீரின் நிறத்தை அகற்றலாம்
   3) நீரில் உள்ள சிறிய திண்மப்பதார்த்தங்களை அகற்றலாம்
   4) காற்று வாழ்வு பற்றீரியாக்களை அகற்றலாம்

www.ikeu.lk

5) நுண்ணங்கிகளை அகற்றலாம்

13. கிளையொட்டுக்கான ஒட்டுக்கட்டையைப் பெறும் தாவரம்
A. நன்கு பரந்த ஆழமான வேர்த் தொகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
B. ஒட்டுமுளையுடன் தகவின்மையைக் காட்டுதல் வேண்டும்
C. உயர் தரமான விளைச்சலைத் தரக்கூடியதாக இருத்தல்.
இவற்றுள் சரியானது?
1) A, B 2) B 3) A, C 4) A 5) A, C

14. பதிய முறை இனப்பெருக்கமெனப்படுவது பிறப்புரிமையில் ரீதியாக,
1) வேறுபட்ட தாவரங்களை உருவாக்கும் இயற்கையான செயன்முறையாகும்.
2) ஒத்த தாவரங்களை உருவாக்கும் செயற்கையான செயன்முறையாகும்.
3) ஒத்த தாவரங்களை உருவாக்கும் இயற்யான செயன்முறையாகும்.
4)ஒத்த தாவரங்களை உருவாக்கும் இயற்கையான அல்லது செயற்கையான செயன்முறையாகும்.
5)வேறுபட்ட தாவரங்களை உருவாக்கும் இயற்கையான அல்லது செயற்கையான செயன்முறையாகும்.

15. இழைய வளர்ப்பில் அமுக்கவடுகலன் பயன்படுத்தப்படுவது

1) மேற்பரப்பு தொற்று நீக்கம் செய்ய

2) X- Plant ஐ தொற்று நீக்கம் செய்ய

3) வளர்ப்பூடகத்தை தொற்று நீக்கம் செய்ய

4) X- Plant ஐ உட்புகுத்தல் செய்ய

5) நாற்றுக்களை காலவிணக்கப்படுத்தல்.

16. சூற்பிள்ளை ஈனும் அலங்கார மீன் பின்வருவனவற்றுள் எது ?

1. பிளேட்டிஸ்

2. குராமி

3. கோல்டன் பாப்

4. ஒஸ்கா

5. ரெட்டா

17. மீனிற்கு நாளொன்றிற்கு அதன் உடல் நிறையின் எத்தனை சதவீதம் உணவு வழங்க வேண்டும்?

1. 2 % **2. 10 %** **3. 5 %** **4. 15 %** **5. 20 %**

18. பால், முட்டை என்பவற்றில் அதிகளவில் காணப்படும் புரதத்தை முறையே குறிப்பது

1) மயோசின், லக்ரோசு

2) லக்ரோசு, அல்புமின்

3) கேசின், அல்புமின்

4) அல்புமின், மயோசின்

5) லக்ரோசு, கரட்டின்

19. முட்டையின் தரம் பற்றிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முட்டையின் அக, புற இயல்புகள் முட்டையின் தரத்தை தீர்மானிக்கும்.
B - வர்த்தக நோக்கத்தில் உற்பத்தியாகும் முட்டைகளின் அக இயல்புகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.
C - முட்டையின் புற இயல்பிற்கு அமைவாக வகுப்பு AA, வகுப்பு A, வகுப்பு B என தரம்

www.lkedu.lk

பிரிக்கப்படுகிறது.
தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

1) A **2)** B **3)** C **4)** A,B **5)** A, B, C

20. புரொயிலர்க் கோழி வளர்ப்புக் கைத்தொழிலில் ஏற்படும் வளி மாசடைதலைக் குறைப்பதற்கு மேற்கொள்ளத்தக்க மிக உகந்த நடவடிக்கையாக அமைவது?

1) கனகூளத்தை வாரத்துக்கொரு தடவை கிளறுதல்.


2) முடிய மனையைப் பயன்படுத்தல்.

3) வளி வெளிச்செலுத்தற் காற்றாடிகளைப் பயன்படுத்தல்

4) பொருத்தமான கனகூளப் பதார்த்தத்தைப் பயன்படுத்தல்.

5) நீர்ப்பாத்திரங்களில் நீர்க்கசிவு ஏற்படல், மேவுபாய்தல் ஆகியவற்றைத் தவிர்த்தல்.

21.



படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம்
(1) பாலடர்த்திமானி
(2) பியுற்றோமானி
(3) லக்ரோமானி
(4) வெப்பமானி
(5) மைய நீக்கி

22. பாலை நற்காப்பு செய்யும் முறைகளில் யோக்கட் தயாரித்தல் முறை எந்த செயற்பாட்டின் கீழ் அடங்கும்?
1) பற்றீரிய உறைகள்
2) லக்ரிக்கமில நொதித்தல்
3) அற்ககோல் நொதித்தல்
4) செறிவாக்கம்
5) அசெற்றிக்கமில நொதித்தல்

23. கதிரடித்தல் எனப்படுவது உணவுக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நவீன நற்காப்பு நுட்பமுறையாகும். உணவைக் கதிரடிக்கும்போது பெரும்பாலும் ஏற்படும் பாதகமான விளைவு உணவில் அடங்கியுள்ளது?
1) சுயாதீன தொகுதிகளின் அளவு குறைவடைதல்
2) புரதம் ஒட்சியேற்றமடைதல்.
3) விற்றமின் A யின் அளவு குறைவடைதல்.
4) கனியுப்புகள் ஒட்சியேற்றமடைதல்.
5) நொதியங்கள் உயிரப்புடையாதல்.

24. பழங்கள் பழுதடைவதை ஊக்குவிக்கும் நுண்ணங்கி எது ?
1. *Acetobacter*
2. *Clostridium*
3. *Streptococcus*
4. *Microbacterium*
5. *Bacillus*

25. உணவுப் பொருட்களில் உள்ள இலிப்பிட்டின் அளவை கணிப்பதற்கு செய்யக்கூடிய பரிசோதனை முறை?
1) Kjheldhal முறை
2) Lane and Eynan முறை
3) அயடின் பரிசோதனை

www.lkedu.lk

4) சாயப்பினைப்பு சோதனை
5) Soxhell முறை

26. பல்படை பொதியில் (Tetra pack) அலுமினியத்தாள் பயன்படுத்துவதன் நோக்கம்?
1) உணவைப் பொருத்தமான முறையில் பேணுதல்
2) ஒட்சிசன், சூரிய ஒளி போன்றவற்றுக்கு தடையாக இருக்கும் அதேவேளை வாயுக்களால் பக்கப்புற நசுக்குதலினின்று பாதுகாப்பு
3) உணவுப் பொருளுக்கு வலுவை வழங்கச் செய்தல்
4) வெளிப்புறமான நீராவி போன்றவற்றனின்று கொள்கலனையும் உணவையும் பாதுகாப்பது
5) வெப்பத்திற்கு ஈடு கொடுக்கின்றமை

27. தானியங்களில் அறுவடைக்குப் பிந்திய இழப்பு அதிகம் ஏற்படுவது?
1) உலர்த்தலின் போது.
2) அறுவடையின்போது.
3) பொதியிடலின்போது.
4) கொண்டு செல்லலின்போது.
5) களஞ்சியத்தின் போது.

28. குடி நீருக்கான தேசிய தரச் சான்றிதழ் பின்வருவனவற்றில் எது?
1. SLS 776 2. SLS 05 3. ISO 22000 4. SLS 894 5. HACCP

29. களஞ்சியத்தில் ஏற்படும் விளைச்சல் இழப்புக்களை குறைப்பதற்கு,
1) களஞ்சியத்தில் அதிக வெப்பநிலையைப் பேண வேண்டும்.
2) களஞ்சியத்தில் காற்றோட்டத்தை மட்டுப்படுத்த வேண்டும்.
3) பழங்களை அதிக ஈரப்பதனிலும் குறைந்த வெப்பநிலையிலும் பேண வேண்டும்.
4) தானியங்களைக் களஞ்சியப்படுத்தும் போது உலர்த்துதல் கூடாது.
5) விளைச்சல்களை நிலத்தில் குவித்து வைத்தல் வேண்டும்.

30. தொழிற்சாலை ஒன்றில் மூலப்பொருளிலிருந்து உற்பத்தியின் இறுதிப் பொருள் வரையுள்ள அனைத்துச் செயற்பாடுகளும் சுகாதாரமானதும் சிறந்த தரத்தைக் கொண்டதாகவும் அமைய மேற்கொள்ளப்படும் நடைமுறை யாது?
1. GMP? 2) GAP 3) GHP 4) SLS 5) HACCP

www.ikolu.lk

பகுதி II

சகல வினாக்களுக்கும் விடை தருக

1.A. உயிர் முறைமைகளில் காலநிலைக் காரணிகள் பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்துகிறது.

1. வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை கிடைக்கும் காலப்பகுதியை குறிப்பிடுக?

……..

2. விவசாய உயிர் முறைமைகளின் மீது சூரியக் கதிர்ப்பின் செறிவு குறைவடைவதன் பிரதான செல்வாக்கை குறிப்பிடுக?

.....

3. தன்னியக்க வானிலை நிலையத்தில் காணப்படும் பிரதான கூறுகள் மூன்று தருக?

.....

.....

.....

B. உயிர் முறைமைகளில் மண்ணின் செல்வாக்கு அளப்பரியது.

1. மண்ணின் இரசாயண இயல்பு மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான கூறு எது?

.....

2. கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவு என்றால் என்ன ?

.....

.....

3. மண்ணின் இரசாயண இயல்புகளின் பாதகமான விளைவுகளை நீக்கும் முறைகள் மூன்று தருக?

.....

.....

.....

4. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் மண் பாகுபாட்டு முறையைக் குறிப்பிடுக?

.....

C. நில அளவையின் பல்வேறு பயன்பாடுகள் உயிர் முறைமைகள் தொழினுட்பவியலில் பயன்படுகின்றது.

1. மாணவர்களால் இரு புள்ளிகளுக்கு இடையிலான தூரம் அளவிடும் சந்தர்ப்பத்தில் Rear tape man புள்ளி மீது 20 m அடையாளத்தில் பிடிக்கும் போது Head tape man முதலாவது மீற்றரினுள் 0. 648 m என வாசித்தான். எனின் இரு புள்ளிகளுக்கு இடையிலான தூரத்தை கணிக்க?


.....

.....

.....

www.lkedu.lk

2.



A. மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தை பெயரிடுக?

……

B. இவ் உபகரணம் பயன்படுத்தப்படும் நிலஅளவை முறையை குறிப்பிடுக?

…….

3. தளபீட நிலஅளவை முறையின் முக்கியத்துவங்கள் மூன்றைத் தருக?

.....

.....

.....

D. நிலக்கீழ் நீர் அங்கிகளின் இருப்புக்கு இன்றியமையாதவொன்றாகும்.

1. நீரேந்தி என்பதை வரையறுக்க?

.....

.....

2. நிலக்கீழ் நீர் மீள் நிரம்பல் நிகழும் முறைகளைத் தருக?

.....

.....

3. நிலக்கீழ் நீர் மீள் நிரம்பலை அதிகரிக்கக்கூடிய முறைகள் மூன்று தருக?

.....

.....

.....

E. 1. நீரின் இரசாயணப் பரமாணங்கள் மூன்று தருக?

.....

.....

.....

2. நீரின் கடினத்தன்மைக்கு காரணம் ஒன்று தருக?

www.ikedu.lk

.....

3.நீரை மாசடையச் செய்யும் அசேதன மாசுக்கள் இரண்டு தருக?

.....

.....

02. A. 1. பதி வைத்தல் என்பதை வரைவிலக்கணப்படுத்துக?

.....
.....
.....

2. நிலப் பதிவைத்தலின் பிரதான முறைகள் நான்கு தருக?

.....

.....

.....

.....

3. ஒட்டு வேலையை வெற்றியடையச் செய்ய மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் இரண்டு தருக ?

.....
.....
.....

B. 1. வாயினுள் அடை காக்கும் மீன்களுக்கு உதாரணம் ஒன்று தருக?

.....

2. மீனை இனவிருத்தி செய்வதற்காக ஓர் இடத்தை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் இரண்டு தருக?

.....
.....

C. 1. செறிவான கோழி வளர்ப்பின் பிரதான முறைகள் மூன்றைக் குறிப்பிடுக?

.....

.....

.....

2. செயற்கை முறையில் குஞ்சுகளைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படும் உபகரணத்தை குறிப்பிடுக?

.....

www.lkedu.lk

3. புற இயல்புகள் மூலம் முட்டையின் தரத்தைப் பரிசீலிக்கும் போது கவனிக்க வேண்டிய இயல்புகள் மூன்று தருக?

.....

.....

.....

D.1. இறைச்சி பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் நுண்ணங்கி வகையை குறிப்பிடுக?

.....

2. பாச்சராக்கத்தின் மூன்று முறைகளை நிபந்தனையுடன் குறிப்பிடுக?

.....

.....

.....

3. உணவு தயாரித்தலில் பயன்படுத்தப்படும் பிரதான போக்கு முறைகள் மூன்றைக் குறிப்பிடுக

.....

.....

.....

E. 1. புலனுக்கெட்டும் தன்மையை மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக ?

.....
.....

2. விசேட வகை பொதியிடலில் பயன்படுத்தப்படும் வாயுக்கள் இரண்டு தருக ?

.....

.....

3. உச்ச பதிய வளர்ச்சிக்கு முன்னர் அறுவடை செய்யப்படும் விளைபொருட்களுக்கு உதாரணம் இரண்டு தருக ?

.....

.....

4. நெல் அறுவடை செய்யும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக?

.....

.....

www.lkedu.lk

கட்டுரை வினாக்கள்

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க

1. A. தன்னியக்க வானிலை அவதான நிலையமொன்றை பயன்படுத்துவதன் அனுகூலங்களை விபரிக்க?

B. மண் அடர்த்தியானது உயிர்முறைமைகள் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விபரிக்க?

C. கழிவுநீர் பரிகரிப்புச் செயன்முறையின் பிரதான படிமுறைகளை விபரிக்க?

2.A. சங்கிலி அளவை முறையைப் பயன்படுத்தி பாடசாலை வளவொன்றை அளக்கும் படிமுறையை குறிப்பிடுக?

B. நடுகைப் பொருட்களை நாற்று மேடையில் நடுவதன் அவசியத்தை விளக்குக?

C. அலங்கார நீர்த்தாவர வளர்ப்பு முறைகளை விளக்குக?

3.A. பண்ணை விலங்கு வளர்ப்புக்காக உயர் தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக?

B. புதிய உணவொன்றை சந்தையில் அறிமுகம் செய்யும் போது பின்பற்ற வேண்டிய அடிப்படை முறைகளை விளக்குக?

C. நெல்லின் அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளை பாய்ச்சல் கோட்டுப் படம் மூலம் விளக்குக?

4.A. அவதிக் கட்டுப்பாட்டு புள்ளிகளின் அபாயப்பகுப்பாய்வு முறையின் படிமுறைகளைத் தந்து விளக்குக?

B. பிரோயிலர் இறைச்சி உற்பத்திச் செயன்முறையின் படிமுறைகளை குறிப்பிடுக?

C. நுண்முறை இனப்பெருக்கத்தின் பிரதான படிமுறைகளை விளக்குக?

www.ikdu.lk